தஞ்சாவூர் மாவட்ட நிலஅளவைப் பதிவேடுகள் துறை உதவி இயக்குநர்(கூ.பொ)
மற்றும் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (நிலஅளவை)
அவர்களின் செயல்முறை ஆணை

பிறப்பிப்பவர்: திரு. க. அரி.,

ந.க. அ8/1228/2019 நாள்: 11.07.2019

பொருள்: பொதுப்பணி – நிலஅளவைப்பதிவேடுகள்துறை – தஞ்சாவூர் மாவட்டம் - தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம் தொகுதி IV-ன்கீழ் 2015-16, 2016 -17 மற்றும் 2017-18–ம் ஆண்டிற்கான தெரிவு செய்யப்பட்டு தஞ்சாவூர் மாவட்டத்திற்கு இளநிலை உதவியாளராக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதன்படி இளநிலை உதவியாளர் இனத்தில் பணிநியமனம் வழங்கப்பட்டது - இம்மாவட்டத்தில் பணியேற்பு செய்த இளநிலை உதவியாளர் செல்வி. மு. அனுசுயா என்பவருக்கு பணிவரன்முறை செய்து ஆணையிடுதல் - தொடர்பாக

பார்வை:
1. சென்னை தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம் செயலாளர் அவர்களின் கடிதம் எண். 1162/PSD – H1/2019 நாள். 18.02.2019.
2. சென்னை நிலஅளவை மற்றும் நிலவரித்திட்ட இயக்குநர் அவர்களின் செ.மு.ஆ.ந.க. ர2/38646/2018 (நி.அ) (2) நாள். 08.03.2019.
3. இவ்வலுவலக செ.மு.ஆ.ந.க. அ8/1228/2019 நாள். 09.03.2019.
4. தொடர்புடைய ஆவணங்கள்

---

ஆணை:-

தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம் தொகுதி IV-ன்கீழ் 2015-16, 2016 -17 மற்றும் 2017-18–ம் ஆண்டிற்கான தெரிவு செய்யப்பட்ட நபருக்கு பார்வை (1) மற்றும் (2)ல் காணும் உத்தரவுப்படி, தஞ்சாவூர் மாவட்ட நிலஅளவை அலுவலகத்திற்கு **செல்வி. மு. அனுசுயா, இளநிலை உதவியாளராக** ஒதுக்கீடு செய்து ஆணையிடப்பட்டது.

அதன்படி பார்வை (3)ல் காணும் இவ்வலுவலக செயல்முறை ஆணையில் இளநிலை உதவியாளராக **செல்வி. மு. அனுசுயா** என்பவருக்கு இம்மாவட்ட அலகில் பணிநியமனம் வழங்கி ஆணையிடப்பட்டது.

| வ. எண் | பெயர் | பதவி | இளநிலை உதவியாளராகப் பணியேற்பு செய்த நாள் | பணிவரன் முறை செய்யப்படும் தேதி | குறிப்பு |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| 1. | செல்வி.மு.அனுசுயா | இளநிலை உதவியாளர் | 11.03.2019 முப | 11.03.2019 முப | |

மேலும், கீழ்க்காணும் நிபந்தனைகளுடன் இளநிலை உதவியாளராக பணியேற்பு செய்த தேதியான கலம் (4)ல் கண்ட 11.03.2019 முற்பகல் முதல் இவர் பணிபுரியும் இளநிலை உதவியாளர் இனத்தில் கலம் (5)ல் குறிப்பிட்டுள்ளவாறு 11.03.2019 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது.

நிபந்தனைகள்:-

1. இளநிலை உதவியாளரது பணிவரன்முறையானது சென்னை உயர்நீதிமன்றம்/அதன் மதுரைகிளையில் தொடரப்பட்டுள்ள வழக்குகளின் இறுதி தீர்ப்புக்கு கட்டுப்பட்டதாகும். மேலும் நியமன ஆணைகளில் தெரிவிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளுக்குட்பட்டது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

2. மேற்காணும் இளநிலை உதவியாளருக்கு தகுதிகாண் பருவம் விளம்பி ஆணையிடுவது தொடர்பாக, உரிய காலத்தில் (இரண்டு ஆண்டுகள் நிலையில்) துறைத்தேர்வுகளிலும் மற்றும் உரிய பயிற்சியிலும் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

உதவி இயக்குநர் (கூ.பொ),
நிலஅளவைப் பதிவேடுகள் துறை,
தஞ்சாவூர்.

பெறுநர்:-
1. செல்வி. மு. அனுசுயா,
இளநிலை உதவியாளர்,
மாவட்ட நிலஅளவை அலுவலகம், தஞ்சாவூர்.

நகல்: சென்னை நிலஅளவை மற்றும் நிலவரித்திட்ட இயக்குநர் அவர்களுக்கு பணிந்தனுப்பப்படுகிறது.

நகல்: திருச்சிராப்பள்ளி நிலஅளவைப்பதிவேடுகள்துறை, மண்டலத் துணை இயக்குநர் அவர்களுக்கு பணிந்தனுப்பப்படுகிறது.

நகல்: கண்காணிப்பாளர் 1, 2 மற்றும் 3

நகல்: அ3, அ4 மற்றும் அ8